# புள்ளித்திட்டம்

## அரசியல் விஞ்ஞானம்

ரம் 12 (2015)

1) 5
2) 2
3) 1
4) 1
5) 3
6) 1
7) 4
8) 5
9) 2
10) 3
11) 5
12) 3
13) 1
14) 4
15) 5
16) 3
17) 2
18) 3
19) 1
20) 1
21) 5
22) 2
23) 1
24) 4
25) 3

### பகுதி II

### பகுதி A

1) 1. தாராண்மை வாதக்குழுவினர்
   2. மாக்சிச வாதக்குழுவினர்

2) பொருளாதாரம்
   சமூகம்
   உளவியல்
   வரலாறு
   புவியியல்
   கலாசாரம்

3) 1. பொது மக்களது அரசியல் பங்கேற்பு மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்பட்டமை
   2. மூன்றாம் உலக நாடுகளில் சனநாயகம் பலவீனமடைந்து காணப்பட்டமை
   3. போதியளவு வளங்கள் இருந்த போதும் பொருளாதார விருத்தி காணப்படாமை
   4. நல்லாட்சி காணப்படாமை

4) கபிரியேல் ஆல்மண்ட், டேவிற் ஈஸ்வரன்

5) அரசியல் இலக்கணம் - லாஸ்கி
   சட்டத்தின் உயிர் - மொன்டெஸ்கியூ

6) உயர் அரசியல் கலாசாரம், தாழ்வான அரசியல் கலாசாரம்

7) உண்மை நிர்வாகம், பெயரளவு (நாம) நிர்வாகம்

8) 1. கட்சிகள் பெறும் வாக்குகளுக்கேற்ப ஆசனங்கள் பிரித்து வழங்கப்படல்
   2. போனஸ் ஆசனம் வழங்கப்படும் முறை காணப்படுதல்

agaram.lk

Scanned with CamScanner

3. தனிமாற்று வாக்குமுறை பட்டியல் முறை காணப்படுதல்

4. இடைத்தேர்தல்கள் நடைபெறுவதில்லை

5. திறந்த பட்டியல் முறை, மூடிய பட்டியல் முறை காணப்படல்

6. சிறிய கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைத்தல்

9) 1. மக்கள் அரசாங்கம் பற்றிய கருத்துக்களை முன்வைத்தல்

2. அரசாங்கம் தாம் செய்யும் விடயம் தொடர்பாக மக்களின் கருத்தினை அறிதல்

10) 1. நலன் பேணும் குழுக்கள்

2. கருத்தியல் குழுக்கள்

## பகுதி B

1) அ) அரசு நிலையானது அரசாங்கம் நிலையற்றது

அரசுக்கு எல்லையுண்டு. அரசாங்கம் எல்லைகளைக் கடந்தும் காணப்படலாம். மக்கள் அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழ முடியாது. அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ந்தெழும் உரிமை மக்களுக்குண்டு. ஓர் அரசில் வாழும் சகல குடிமக்களும் அரசின் உறுப்பினராவர். ஆனால் அவர்களுள் ஒரு பகுதியினரே அரசாங்கத்தின் உறுப்பினராவர். அரசு, ஆள்புலம், மக்கட் தொகை, அரசாங்கம், இறைமை என்ற சிறப்பியல்புகளைக் கொண்டது. அரசாங்கம் அரசின் ஒரு பகுதி மட்டுமே அரசு எண்ணக்கரு ரீதியானது அரசாங்கம் நடைமுறைச் செயற்பாடுடைய உயிருடைய காட்சி நிறுவனமாகும்.

ஆ) முறைசார்ந்த முறை, முறைசாரா முறை என்ற வகையில் விளக்கப்பட்டிருத்தல

**முறைசார் முறை:-** பாடசாலை, தொழில்நுட்பக்கல்லூரி பல்கலைக்கழகம், மற்றும் கல்வி நிறுவனங்களில் வேலைத்திட்டங்கள் முறையாக வகுக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மூலமும் அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்வர்.

**முறைசாரா முறை:-** குடும்பம் சமவயதுக்குழுக்கள், அரசியற் கட்சிகள், ஊடகங்கள், சமயத்தாபனங்கள், அரசியல் தன்மை பெறும் வேறு செயற்பாடுகள், இவற்றுள் ஒருவரின் அடிப்படை அரசியல் அறிவு மற்றும் அரசியல் பண்புகள் ஒழுங்கமைத்தல் என்பவற்றில் குடும்பத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

2) அ) ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் செயற்படும் ஒரு கூட்டம்

**மைக் ஐவர்:-** அரசியல் திட்டப்படி சில கொள்கைகள் மூலம் அரசாங்கத்தை நடாத்த விளையும் கூட்டம்

**எட்மண் பேக்:-** தமது கூட்டு முயற்சியினூடாக தேசிய நலன்களை வளரச் செய்யும் நபர்களின் கூட்டம்

**பணிகள்:-** பொதுமக்கள் அபிப்பிராயத்தை ஒன்று திரட்டுதல் வாக்காளருக்கு அறிவூட்டுதல், எதிர்காலத்தலைவர்களைப் பயிற்றுவித்தல், பொதுக்கொள்கை வகுப்பில் பங்களிப்புச் செய்தல் ஒன்றிணைந்த பொதுசன அபிப்பிராயத்தை அரசாங்க மட்டத்துக்கு கொண்டு செல்லல். அரசின் இறைமை அதிகாரத்தையும் சமூக அதிகாரத்தையும் இணைத்து ஆணையதிகாரத்தை நிர்ணயித்தல்

agaram.lk

Scanned with CamScanner

ஆ) அரசாங்கத்தின் அதிகாரம் ஒரு தனிநபரிடமோ அல்லது ஒரு ஸ்தாபனத்திடமோ ஒன்று குவிவதனை தடுக்க முடிதல் அதிகாரம் ஒன்று குவிவதனைத்தடுப்பதன் விளைவாக அரசாங்கத்தின் குறிப்பாக நிறைவேற்றுத் துறையின் தன்னிச்சையான செயற்பாட்டினை அல்லது சர்வாதிகாரத்தினைத்தடுக்க முடிதல் அரசாங்கத்தின் சர்வாதி காரத்தைத் தடுப்பதன் மூலம் மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதுகாக்க முடிதல். அரசாங்கத்தின் அதிகாரங்களை யார் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நிச்சயமாக இனங்காண முடிதல் நல்லாட்சியையும் நிச்சயமாக இனங்காண முடிதல் நல்லாட்சியையும் சனநாயக ஆட்சியையும் பலப்படுத்த முடிதல்

இ) அறிஞர்கள், பெயர்கள், தோற்றம் வளர்ச்சி என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்

கட்சிகள் பெறும் வாக்குகளுக்கேற்ப ஆசனங்கள் பங்கீடு செய்யப்படல்

பட்டியல் முறை, தனிமாற்றுமுறை காணப்படல்

மூடிய பட்டில், திறந்த பட்டியல் காணப்படல்

வெட்டுப்புள்ளி முறைகாணப்படுதல் கட்சிகளின் தலை மைத்துவ அடிப்படையில் போட்டியிடுதல்

இடைத்தேர்தல்கள் நடாத்தப்படாமை

ஈ) முகவுரை தரப்படல வேண்டும்

| ஒற்றையாட்சி | கூட்டாட்சி |
|---|---|
| ஒரு மத்திய அரசு | மத்திய – மாநில அரசுகள் காணப்படுதல் |
| இறைமை மத்திய அரசிடம் காணப்படுதல் | இறைமை மத்திய மாநில அரசுகளுக்கு பிரிக்கப்பட்டோ பகிர்ந்தளிக்கப்பட்டோ இருக்கும் |
| மத்திய அரசுக்கே மக்கள் அடிபணிவர் | மத்திய – மாநில அரசுகளுக்கு அடிபணிவர் |

போன்ற மேலும் பல விளக்கங்கள் வழங்கப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்

3) அ) உரிமையின் வரைவிலக்கணம் அதன் வகைகள் உரிமைகளின் முக்கியத்துவம் என்பன குறிப்பிடப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்

ஆ) அரசியல் யாப்பு என்றால் என்ன? அரசியல் முறைமையில் அரசியல் யாப்பின் வகிபங்கு என்பனபற்றி விளக்கம் தரப்பட்டிருத்தல் வேண்டும்

அரசியல் முறைமையின் இயல்பு அரசியல் யாப்பின் மூலமே வெளிப்படுத்தப்படுதல்

அரசாங்கத்தின் இயல்பினை வெளிப்படுத்துதல்

பிரசைகளின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல்

அரசுக்கு அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கையை வழங்குதல்

நாட்டுக்கு அரசியல் உறுதிப்பாட்டினை வழங்குதல்

சர்வாதிகார ஆட்சி முறையில் இருந்து நாட்டைப் பாதுகாத்தல்

தேசத்தை நிர்மாணிக்கும் வகிபங்கு



agaram.lk

Scanned with CamScanner

இ) நல்லாட்சி

நல்ல ஆட்சி, நல்ல சமூகத்துடன் கூடிய தேசம் பற்றிய எண்ணம் நல்லாட்சியாகும். 1980களின் பின்னர் இவ் எண்ணக்கரு முக்கியம் பெற்றது. பொருளாதாரமந்தம், சமூக நீதி வீழ்ச்சியடைந்தமை, இவ்எண்ணக்கரு வளர்ச்சி அடையக் காரணமாகியது. இதற்கான காரணங்கள் அதிகாரக்குவியல், ஆட்சியின் செயற்றிறனின்மை, அரசாங்க சேவை அரசியல் மயமாதல், அரச கொள்கைத் தீர்மானங்களில் மக்கள் பங்களிப்பு இடம் பெறாமை.

ஈ) ஊடகங்கள் சனநாயகத்தின் காவல் நாய்கள் என்பதற்கான சான்றுகளை விளக்க வேண்டும். நல்லாட்சி மற்றும் சிவில் சமூகம் சிறந்த முறையில் செயற்படவும் அரசாங்கம் விடும் தவறுகளை சுட்டிக்காட்டி மக்களின் நலன்களைப் பெறவும் ஊடக சனநாயகம் இன்றியமையாதவை என்ற வகையில் விளக்கம் அமைதல் வேண்டும்.

4) அ) கபினட் அரசாங்க முறையில் நிறைவேற்று அதிகாரம் ஒரு தனிமனிதனின் கையில் ஒன்று குவியாது ஒரு கூட்டுக்குழுவிற்கு பன்முகப்படுத்தப்பட்டிருத்தல் நிறைவேற்றத்துறை தனது செயற்பாடுகள் மற்றும் பணிகள் தொடர்பாக சட்டத்துறையினூடாக மக்களுக்கும் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருத்தல். மக்கள் அபிப்பிராயம் அடிக்கடி தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படுதல் இதன் மூலம் சனநாயகச் செயற்பாட்டில் அதிகமாக ஈடுபடுவதற்கான வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்பட்டிருத்தல்

ஆ) சிவில் சமூகம் என்பதன் பொருள், சிவில் சமூகம் தோற்றம் பெற்றதற்கான காரணம் சிவில் சமூகம் மூலம் நல்லாட்சி ஏற்படும் என்பதனை விமர்சன ரீதியாக விபரிக்க வேண்டும்.

இ) ஒழுங்கமைப்பட்ட சமூகத்தின் அரசியல் செயன்முறைக்கும் செயலொழுங்கிற்கும் தலைமை தாங்கும் குழுவினர். இவர்கள் பணம், அதிகாரம், பரம்பரை வசீகரத்தன்மை, வசீகரத்தலைமைத்துவம், அரசியல் ஆற்றல் முதலானவற்றின் அடிப்படையில் உருவாகின்றனர் மேலதிகமான விளக்கங்கள்

ஈ) சட்டம் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல்
சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக விழுமியங்களை சட்டம் வெளிப்படுத்துதல்
சமூகத்தில் நிலவும் மோதல்களைத் திருப்பதில் சட்டம் உதவுதல்
சமூக மற்றும் தனிமனித நோக்கங்களை நிறைவு செய்வதில் சட்டம் உதவுதல்
சட்டத்தை மீறினால் தன்மீது இழுக்கு ஏற்படும் அதாவது தீராத அவப்பெயர் கிடைக்கும் என்ற அச்சத்தினாலும் மனிதர் சட்டத்துக்கு அடிபணிகின்றனர்
எனவே மனிதர் தண்டனையின் மீதுள்ள பயனத்தினால் மட்டுமன்றி வேறும் பல காரணங்களால் சட்டத்துக்கு அடிபணிகின்றனர்.

agaram.lk

Scanned with CamScanner